ஏழை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் KKSSS சார்பில் நடத்தப்படும் EDUCARE மாணவர்களுக்கான கோடைக்கால முகாம் SPARK 2024 எனும் தலைப்பில் மே மாதம் 12 முதல் 19 வரை 7 நாட்கள் நடைபெற்றது. KKSSS இயக்குநர் தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் நிகழ்வை துவங்கி வைத்தார். எல்லா நாட்களிலும் காலை திருப்பலியுடன் முகாம் ஆரம்பமானது. ஆசிரியர் ஜோஸ்வா மற்றும் ஆசிரியர் ஜெரோம் ஆகியோர் ஆங்கிலத்தில் தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கினார்கள். பேச்சுத்திறன், ஆளுமைத் திறன், தலைமைத்துவ பண்பு ஆகியவை மேம்படுவதற்கான பயிற்சி வகுப்புகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. CAMP FIRE போன்ற புதுமையான நிகழ்ச்சிகள் மாணவர்களை மகிழ்ச்சியின் வெள்ளத்தில் ஆழ்த்தியது. முகாமின் நிறைவு விழா மஞ்சாலுமூடு மறைவட்ட பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களின் மனதில் மறக்க முடியாத பொன்நாட்களாய் இந்த நாட்கள் அமைந்தது. இதில் சுமார் 48 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள். இந்த செயல்பாடுகளை EDUCARE ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. மெரின் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக EDUCARE ஒருங்கிணைப்பாளராக சிறப்பாக பணியாற்றிய அருட்சகோதரி மெரின் அவர்கள் பணி மாறுதல் பெற்று செல்வதால் அவர்களுக்கு நன்றி கூறப்பட்டது.

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குனராக பணியாற்றி வந்த அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் மே மாதம் முதல் விருதுநகர், புனித ஜோசப் ஆலய பங்குதந்தையாக பணி மாற்றம் பெற்றார். தொடர்ந்து கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் புதிய துணை இயக்குனராக அருட்தந்தை சுபின் அவர்கள் பொறுப்பேற்று கொண்டார்.

## ஆயர் பார்வையிடல்

தக்கலை மறைமாவட்ட ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தினை மே 13 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் பார்வையிட வந்தார்கள். தனித்தனியாக அனைத்து துறைகளையும் சந்தித்து நிறை

குறைகளை கேட்டறிந்தார். இறுதியாக இயக்குநர் தந்தை உட்பட அனைத்து பணியாளர்களுக்கும் வாழ்த்துகளையும், ஆலோசனைகளையும் கூறினார்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

---

## தொடக்கவிழா: மறைக்கல்வி, மிஷன்லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கம்

2024-25 ஆம் மறைக்கல்வி ஆண்டையும், மிஷன்லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கத்தின் இவ்வருடச் செயல்பாடுகளையும், மே 18, 2024 கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவின் போது, குருகுல முதல்வர், மூன்று துறைகளின் இயக்குநர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். எரியும் மெழுகுவர்த்திகளை ஏந்தி ஆசிரியர்கள் உறுதிமொழி எடுத்தனர். பங்களவிலான தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்களை மறைக்கல்வி நிலையம் வழங்கியது. தொடக்க விழாவில் இயக்குநரின் தொடக்கஉரை, விளக்கு ஏற்றுதல், ஆசிரியர்களின் உறுதிமொழி மற்றும் பங்குதந்தையின் இறுதிஆசீர் ஆகியவை இடம்பெற அறிவுறுத்தப்பட்டது.

## மூலமற்றம் ஸ்னேக வில்லா, இல்லவிழா

கேரள மாநிலம் மூலமற்றத்தில் அமைந்துள்ள தக்கலை மறைமாவட்டத்திற்குச் சொந்தமான, மூத்த குடிமக்களுக்கான சினேகவில்லாவின் இரண்டாவது இல்ல தினம் மே 1, 2024 அன்று கொண்டாடப்பட்டது. இல்லமானது திருமதி மெர்சி ஜோஸின் கணவர், மறைந்த திரு ஜோஸ் தரியனின் பெயர் பெற்றுள்ளது. அவரது விருப்பப்படி, புனித சூசையப்பரை சினேகவில்லாவின் பாதுகாவலராக நியமிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மே 1 ஆம் தேதி இல்ல தினத்தைக் கொண்டாடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் அன்றைய இரவு 7:00 மணிக்கு சினேகவில்லா சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் மற்றும் கீதா கிராம மாணவர்கள் வழங்கிய கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர்.

தக்கலை இளையோர் கல்வி பணியகம்
Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

## மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி

மாறப்பாடி, புனித தோமையார் ஆலயத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி மே 02, 2024 வியாழக்கிழமை காலை 11 முதல் 12 மணி வரையிலும், பிலாங்காலை, புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி மே 03, வெள்ளிக்கிழமை காலை 11 முதல் 12 மணி வரையிலும், காட்டாத்துறை, புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி மே 08, புதன்கிழமை காலை 11 முதல் 12 மணி வரையிலும், சேனங்கோடு, லூர்து மாதா ஆலயத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது மே 10, 2024 வெள்ளிக்கிழமை காலை 11 முதல் 12 மணி வரையிலும், அண்ணிக்கரை, புனித மத்தேயு ஆலயத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி மே 12, ஞாயிற்றுக்கிழமை காலை 09 முதல் 10 மணி வரையிலும், TYES ஒருங்கிணைப்பாளர் செல்வி ஜெசிலா மேரி



அவர்களால் நடத்தப்பட்டது. வளர்ந்து வரும் காலகட்டத்தில் மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறப்புடன் செயல்பட வேண்டிய வழிமுறைகள், இலக்கு நிர்ணயித்தல், தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை எவ்வாறு கையாள்வது மற்றும் ஊடக அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு மீள்வது போன்ற பல தலைப்புகளின் கீழ் வகுப்புகள் அமைந்தது. அண்ணிக்கரையில், 10 மற்றும் 12-ம் வகுப்பிற்கு பின் என்ன படிக்கலாம், எந்த துறையை தேர்வு செய்யலாம் போன்ற வழிகாட்டி வகுப்பு கல்விப் பணியக தன்னார்வலர் மெரின்

சுஜித் அவர்களால் கூடுதலாக நடத்தப்பட்டது. இவ்வகுப்புகளில் 200-க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## வேலைவாய்ப்பு முகாம்

மே 18, 2024 சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை இளையோர் மற்றும் வேலைக்காக முயல்பவர்களுக்கான வேலை



வாய்ப்பு முகாமானது கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது.



இவ்வேலை வாய்ப்பு முகாமானது தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகத்தின் மூலம் திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டியின் உதவியுடன், தற்போதைய காலகட்டத்தில் இளையோர்கள் அனைவரும் வேலை வாய்ப்பினை பெறும் நோக்கில் நடத்தப்பட்டது. இதில் 57 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். 36 பேர் வேலைக்காக தேர்வு செய்யப்பட்டனர். இவ்வேலை வாய்ப்பு முகாம் தொன் போஸ்கோ வழிகாட்டி திரு. அருமை ராஜ் மற்றும் இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

***ஜெசிலா மேரி,***
***ஒருங்கிணைப்பாளர்***

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளையில் செயல்படும் மது அடிமை மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றது. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றது. முதல் மற்றும் மூன்றாவது திங்கள் கிழமையில் மதியம் 12 மணி அளவில் மன நலமருத்துவர் வருகை புரிவார். மருத்துவர் வருகை தரும் நாட்களில் பலர் ஆலோசனை பெற்றுச் செல்கின்றனர். இம்மையத்தில் இருந்து சிகிச்சை பெற்றவர்கள் பலர் நலமடைந்துள்ளனர்.

### *திருமண பயிற்சி வகுப்புகள்*

திருமணத்திற்கு தயாராகும் இளையோர்களுக்கு திருமண ஆயத்தப் பயிற்சி மாதந்தோறும் இரண்டாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெற்று வருகிறது. இத்திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பில் இளையோர் பலர் பங்கு பெற்று பயன் பெற்று வருகிறார்கள். வருகின்ற ஜூன் மாதம் 07, 08 மற்றும் 09 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது வெள்ளி காலை 10 மணிக்கு ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை 2:00 மணிக்கு பெற்றோர்களுக்கான பயிற்சியுடன் நிறைவுபெறும். பயிற்சி கட்டணம் ருபாய் 1000.

### *மாதர் ஜோதிஸ் தொடக்கவிழா*

புனித ஜியானா அவர்களின் திருநாளையொட்டி ஏப்ரல் 28 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் மாதர் ஜோதிஸ் தொடக்கவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஏப்ரல் மாத TASK ஆக பங்களவில் மாதர் ஜோதிஸ் துவக்க விழா சிறப்பித்ததை அறிக்கையாக எழுதுதல் வழங்கப்பட்டது.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

**ஈசோவில் அன்பார்ந்தவர்களே,**

இறை அருளால் அருட்சகோதரர்கள் அனைவரும் விடுமுறை முடிந்து மீண்டும் குருமடங்களுக்கு செல்ல தயாராகி வருகின்றனர். இவ்வருடம் களப்பணியாற்றும் அருட்சகோதரர்கள் களப்பணியினை மே மாதம் 10 ஆம் தேதி முதல் அவர்களுக்குரிய பணி தளங்களில் தொடங்கியுள்ளனர். அருட்சகோதரர்கள் பல பங்குகளில் விசுவாச பயிற்சி விழாவினை சிறப்பாக நடத்தி வெற்றிகரமாக முடித்துள்ளனர். விசுவாசபயிற்சி விழாவிற்கு ஆயத்தமாக நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளிலும் அருட்சகோதரர்கள் ஆர்வமுடன் பயிற்சி



அளித்தனர். உஜ்ஜைன் உயர் குருமடத்தில் படிக்கும் அருட்சகோதரர்களுக்கு பட்டப்படிப்பு தேர்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது. மே 13, 2024 அன்று உயர் குரு மடங்களில் படிக்கும் அருட்சகோதரர்கள் வொண்டர்லேண்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். காக்கநாடு சீரோ மலபார் சபை தலைமையகத்திற்குச் சென்று, முன்னாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது அருட்சகோதரர்களுக்கு மிக்க மகிழ்ச்சி அளித்தது.

**அருட்சகோ. பிபின் வின்ஸ்லின்**

| BIRTHDAYS OF REV. FATHERS - JUNE - 2024 | |
|---|---|
| FR. ANIL RAJ DOMINIC | 02 |
| FR. JOHNSILAL ARACKAPARAMPIL | 03 |
| FR. JUSTIN CHERUVELIL | 04 |
| FR. ABIN EETTICKAL MCBS | 07 |
| FR. TOJI KOZHUVAKANDATHIL | 07 |
| FR. JOSEMON PAUL PURAYIDATHIKUNNEL | 19 |
| FR. SAJAN NETTAPONGHU | 21 |
| FR. MIJO PUTHENPURAIL | 25 |
| **FEASTDAY OF REV. FATHERS- JUNE - 2024** | |
| FR. JUSTIN SUTHEESH | 01 |
| FR. ANONY CHUNDELIKKATT | 13 |
| FR. ANTONY JOSE | 13 |
| FR. ANTONY MADAPPURACKAL | 13 |
| FR. ANTONY MAHESH | 13 |
| FR. ANTONY THAKIDIYEL | 13 |
| FR. JOGESH JOSEPH | 24 |
| FR. PETER KIZHAKKAYIL | 29 |

# வரவிருக்கும் நிகழ்வுகள்

குருக்களுக்கான கூட்டம் - ஜூன் *18*

கைக்காரர் மற்றும் கணக்கர்களுக்கான கருத்தரங்கம் - ஜூன் *30*

# மறைமாவட்டச் செய்திகள்

## குருக்களுக்கான கூட்டம், சங்கமம்

மே 22, 2024 புதன்கிழமை காலை 9:30 மணிக்கு தக்கலை சங்கமத்தில் குருக்களுக்கான கூட்டம் நடைபெற்றது. வழக்கம் போல், ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளத்துடன் ஆரம்பமானது. இந்நிகழ்வை அருட்தந்தை வினு D ஜோசப் வழிநடத்தினார்கள். நிகழ்வுகளை குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் கூட்டமானது காலை 11:00 மணியளவில் ஆரம்பமானது. கூட்டத்தின் போது, பின்வரும் முக்கிய நிகழ்வுகள் நடந்தது.

• இராமல்லூர் தியான மையத்தின் இயக்குனர் அருட்சகோதரி லிசியக்ஸ் மரியா CMC அவர்கள் தனது வாழ்க்கையில் கடவுளின் அனுபவத்தை, கடவுளின் வார்த்தையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொண்டார்.

• வரவேற்பு: அருட்தந்தையர் கூட்டத்தில் புதிதாகப் பங்கேற்ற அருட்தந்தையர் ஆன்றணி தகிடியேல், அருட்தந்தை சான்ஜோ தேனேப்ளாக்கல் மற்றும் இடுக்கி மறைமாவட்டத்திலிருந்து அருட்பணிக்காக வந்த அருட்தந்தை தாமஸ் (ஷின்டோ) சவுரியங்குழியில், ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்டு, ரோமில் உள்ள ஏஞ்சலிக்கம் பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியலில் தனது முதுகலைப் வெற்றிகரமாக முடித்து, விடுமுறைக்காக வந்திருந்தார். தக்கலை மறைமாவட்டம் சார்பில் அருட்தந்தை வினோத் கானாக்காலில் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

## பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம், கல்லுவிளை

தமிழ் மற்றும் ஆங்கில வழி ஆசிரியர்களுக்காக ஒரு நாள் கருத்தரங்கு, மே 30, 2024 வியாழக்கிழமை கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் நடைபெற்றது. பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கருத்துரையாளராக அருட்தந்தை பாபி SDB அவர்கள் ஆசிரியர்களின் தகுதி மற்றும் ஒரு நல்ல ஆசிரியராக உருவாக்கப்பட வேண்டிய திறன்கள் குறித்துப் பேசினார். இதில் சுமார் 700 ஆசிரியர்கள் பங்கேற்றனர். கூட்டத்தின் இறுதியில், ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் 2024-2025 ஆம் கல்வி ஆண்டை தொடங்கி வைத்து, கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

மே 5, 2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் "இதயம் காப்போம்" என்ற தலைப்பில் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC தலைமையில் அரை மணி நேர கருத்துப் பகிர்வு நடைபெற்றது. மே 6 முதல் மே 11 வரை மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது. கடைசி நாளான சனிக்கிழமை திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஆடம்பர செபமாலை பவனியும் நடைபெற்றது. மே 24, 2024 இல் அருட்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல் அவர்கள் துணை பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார். மே 26, 2024 திருப்பலிக்குப் பின் ஒரு வருடம் பங்கில் பணியாற்றிய திருத்தொண்டர் அனூப் அவர்களுக்கு பிரிவு உபச்சார விழா நடைபெற்றது.

### புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

அதங்கோடு பங்கில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பணியாற்றிய திருக்குடும்பத் துறவற சபை அருட் சகோதரி விமலா அவர்கள் பணியிடமாறுதல் காரணமாக பங்குமக்கள் சார்பாக மே 19 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் பிரியாவிடை அளிக்கப்பட்டது. அருட்சகோதரியின் ஈடில்லா பணிக்காக வாழ்த்துக்களும் நன்றியும் கூறப்பட்டது. அருட்சகோதரி விமலா அவர்கள் 2019 மே 5 முதல் அதங்கோடு மண்ணில் பணியாற்றத் தொடங்கி திருக்குடும்ப துறவற சபைக்காக அருட் சகோதரிகள் இல்லத்தையும் அதங்கோடு மண்ணில் உருவாக்கி அவ்விடத்தின் முதல் தலைவியாகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது புதிய இல்ல தலைவியாக அருட்சகோதரி றோஸ் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

## மஞ்சாலுமூடு

### திருச்சிலுவை ஆலயம் – மாலைக்கோடு

திருச்சிலுவை ஆலயம் மாலைக்கோட்டில் ஏப்ரல் 28, 2024 அன்று மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் தொடக்க விழாவும், புனித ஜியானா அவர்களின்

விழாவும் கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலி மற்றும் விழா அனைத்தையும் ஒருங்கிணைத்தவர்கள் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள். தொடர்ந்து மாதர் ஜோதிஸ் இயக்கத்திற்கு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுக்கல்

திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுகல்லில் விசுவாச பயிற்சி விழா மே 19, 2024 முதல் மே, 23 2024 வரை நடைபெற்றது.



### புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி

பென்கிரி புனித பெனடிக்ட் பங்கைச் சார்ந்த திரு.ஷாலி - இன் ஒன்றரை வயது குழந்தை சில மாதங்களாக R.C.C மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகின்றது. அந்த குழந்தையின் மருத்துவச் செலவிற்காக பென்கிரி புனித வின்சென்ட் தே பவுல் (S.S.V.P) உறுப்பினர்கள் சேர்ந்து ரூபாய் 7500 வழங்கினர்.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – தெற்றிவிளை

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட தெற்றிவிளை ஆலயத்தில் செயல்படும் கிளைசபை சார்பாக, விபத்தில் படுகாயமுற்ற திரு ரமேஷ் என்பவருக்கு மே 11, 2024 இல் அருட்தந்தை மிஜோ அவர்கள் தலைமையில் மருத்துவ உதவி ரூபாய் 5000 வழங்கப்பட்டது.

## களியல்

### ▶ புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

மே 01, 2024 முதல் மே 05 வரை மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாசப் பயிற்சி விழா நடைபெற்றது. மே 26 மூவொரு இறைவன் திருநாளையொட்டி சிறப்பு திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்திருவிழா, மே 01, புதன்கிழமை முதல் மே 05, 2024 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. முதல் நாள் மாலை 5.30 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. முதல் மூன்று நாட்கள் திருப்பலியும் தொடர்ந்து, நற்செய்தி பெருவிழாவும் நடைபெற்றது. நான்காவது நாள் சனிக்கிழமை திருப்பலியைத் தொடர்ந்து ஆடம்பரத்திருப்பவனியும் நடைபெற்றது. இறுதிநாளாகிய மே 05 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பேரருட்பணி தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் ஆடம்பர இராசை திருப்பலி நடைபெற்றது. தச்சூர்கோணம் புனித மரியன்னை மலங்கரை கத்தோலிக்க



ஆலய பங்குதந்தை அருட்பணி. பீட்டர் ஆனந்த் அவர்கள் மறையுரை வழங்கினார். தொடர்ந்து திருக்கொடியிறக்குதல் மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது. மாலை 6.00 மணியளவில் மறைக்கல்வி மற்றும் பக்த

இயக்கங்களின் ஆண்டுவிழாவும் நடைபெற்றது.
மறைக்கல்வி மாணவர்களின் விசுவாசப் பயிற்சி விழா மே 06 முதல் 12 வரை சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து மே 14 செவ்வாய்க்கிழமை விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட மாணவர்கள் ஒருநாள் இன்ப சுற்றுலா சென்றனர்.

## திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் விசுவாச பயிற்சி விழாவானது மே மாதம் 5ம் தேதி முதல் 10ம் தேதி வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. விவிலிய வசனங்கள் ஒப்புவித்தல், மாறுவேடபோட்டி, விவிலியம் சார்ந்த கலை போட்டிகள் முதலியவை செயல்பாடுகளாக மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விசுவாச பயிற்சி விழாவில் மாணவர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.



## லூர்து மாதா ஆலயம், சேனம்கோடு

சேனம்கோடு, லூர்து மாதா ஆலய மறைக்கல்வி மாணவர்களின் விசுவாச பயிற்சி விழா மே 9, வியாழக்கிழமை ஆரம்பமாகி மே 11 சனிக்கிழமை நிறைவடைந்தது. விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மே 11, 2024 இல் விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுற்றுலா சென்றனர்.

## புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலய திருவிழாவோடு தொழிலாளர் தினமான மே ஒன்றாம் தேதி மாலை 6 மணிக்கு அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில் ஆடம்பரத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து உணவு திருவிழாவும் நடைபெற்றது. மே 04, சனிக்கிழமை காலை 10 மணிக்கு தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றத் திருப்பலியில் 13 குழந்தைகள் முதல் திருவிருந்து பெற்றுக் கொண்டனர். திருவிழாவின் இறுதி நாளான மே 05 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாலப்பள்ளம் பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் றாசா திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 6 மணிக்கு கிள்ளியூர் பங்குத்தந்தை அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு அவர்கள் தலைமையில் மறைக்கல்வி ஆண்டு விழா கலைநிகழ்வுகள் நடைபெற்றது. மே 06, காலை 6.15 மணிக்கு இறந்தோர் நினைவுத் திருப்பலி மற்றும் ஒப்பீசு நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் காலை 9 மணி முதல் மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாச பயிற்சி விழா தொடங்கி மே 10 வெள்ளிக்கிழமை மாலை நிறைவடைந்தது. ஏறத்தாழ 125 மாணவர்கள் விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்டனர். மே 19 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின்னர் உதவி பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் அவர்களுக்கு பிரிவு உபசார விழா பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பங்கு மக்கள் வாழ்த்துக்கள் கூறியும் பரிசுகள் வழங்கியும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். மே 24 வெள்ளிக்கிழமை காலை பங்கிற்கு புதிதாக வந்த அருட்தந்தை ஷிஜோ அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மதியம் 2.30 மணிக்கு பங்கு மக்கள் ஒன்றிணைந்து அருட்தந்தை ஜோஸ் அவர்களை படந்தாலுமூடு இயேசுவின் திருஇருதய ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர்.





### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

மறைக்கல்வி மாணவ மாணவிகளுக்காக விசுவாச பயிற்சி விழா ஏப்ரல் மாதம் 27 முதல் மே மாதம் ஐந்தாம் தேதி வரை நடைபெற்றது. தினமும் காலை 9:30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற விசுவாச பயிற்சி விழாவின் நிறைவு நாள் காலையில் கோலாகலமான பவனி நடைபெற்றது. விசுவாச பயிற்சி விழாவை அருட்சகோதரர். வின்சிலின் வழி நடத்தினார். அனைத்து நாட்களும் உறவியங்களின் சார்பில் மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்பட்டது. மே 15 ஆம் தேதி மாணவ மாணவியருக்கான இன்பச் சுற்றுலா நடைபெற்றது. மே மாதம் 9 ஆம் தேதி தொடங்கி 31ம் தேதி வரை ஆலய கெபியில் தினமும் மாலை ஐந்து முப்பது மணிக்கு சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது. மே 19 இல் பெந்தகோஸ்தே திருநாள் பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மே 31 வெள்ளி மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

### புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

மாங்கரை புனித வியாகப்பர் ஆலய மறைக்கல்வி மாணவர்களின் விசுவாச பயிற்சி விழா மே 5, ஞாயிற்றுக்கிழமை பவனியுடன் நிறைவடைந்தது. தொடர்ந்து



பங்குத்தந்தை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு

பரிசுகள் வழங்கப்பட்டது. மே 6 2024 இல் விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுற்றுலா சென்றனர். மே 26, 2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியைத் தொடர்ந்து திருப்பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. பிற்பகல் 02.00 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. மாலை 06.00 மணிக்கு பாலூர் உறவிய ஆண்டுவிழா பங்குத்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்.

பாத்திமாபுரம், பாத்திமா அன்னை ஆலயத் திருவிழாவை முன்னிட்டு மே 8 மற்றும் 9 ஆகிய இரண்டு நாட்கள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. மே 10, 2024 வெள்ளிக்கிழமை பங்குத்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள். அன்றைய தினம், அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்களால் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மே 11, 2024 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் முதல் திருவிருந்து வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. மே 12, ஞாயிற்றுக்கிழமை மாலை மறைக்கல்வி மன்ற கலை நிகழ்வுகளுடன் திருவிழா கோலாகலமாக நிறைவடைந்தது.





மே 24, 2024 இல் பங்குத்தந்தை மற்றும் உதவி பங்குத்தந்தை அவர்களின் பணி மாறுதல் நிகழ்வு நடைபெற்றது. அருட்தந்தை ஷிஜோ அவர்கள் புதிய பங்குத்தந்தையாக பொறுப்பேற்று கொண்டார்கள்.

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

ஏப்ரல் 29, 2024 முதல் மே 4, முடிய ஆறு நாட்கள் விசுவாசப் பயிற்சி விழா நடைபெற்றது. எல்லா நாட்களும் காலை ஜெபத்துடன் திருப்பலி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நடைபெறும். விசுவாச பயிற்சிவிழா வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன் விவிலியத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, அதன்பின் ஆடல், பாடல், விளையாட்டு, வகுப்பு என்ற அடிப்படையில் நடைபெற்றது. எல்லா நாளும் மாணவர்களுக்கு காலையில் சிற்றுண்டி, மதியம் உணவு என்று உறவியம் மற்றும் பொதுநிலையினர் உதவினர். விசுவாசப் பயிற்சி விழாவினை அருட்சகோதரர் பிபின் அவர்கள் வழி நடத்தினார்கள். ஆறாவது நாள் காலை திருப்பலிக்குப் பின் மாணவர்களும் ஆசிரியர்களும் இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர். குறிப்பாக இவ்வருட விசுவாச பயிற்சி விழா, மனதிற்கு புத்துணர்ச்சி ஊட்டுவதாக அமைந்தது.

மே 19ஆம் தேதி பெந்தெக்கோஸ்தே தினத்தன்று மாதர் ஜோதிஸ் இயக்க துவக்க விழா பங்கு அளவில் கொண்டாடப்பட்டது. தாய்மார்களின் பாதுகாவலராகிய புனித ஜியன்னாவை போல எதையும் தாங்கும் அமைதியான மனநிலையுடன்



பிறருக்கு தேவையறிந்து உதவி செய்யும் நல்லுள்ளம் வேண்டி திருப்பலியில் பங்கேற்று ஜெபித்தனர். மே 22 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி முடிய 10 நாட்கள் மாதா வணக்க ஜெபமாலையும் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. மே 30ஆம் தேதி திவ்யநற்கருணை திருநாள், காலை 6 மணி முதல் மாலை 6

மணி வரை திவ்ய நற்கருணை ஆராதனையும் இரக்கத்தின் ஜெபமாலையும் நடைபெற்றது. திருப்பலியின் நிறைவில் திவ்யநற்கருணை பவனி ஆலயம் சுற்றி நடைபெற்றது. அனைத்து மக்களும் இந்நிகழ்வுகளில் விசுவாசத்தோடு பங்கேற்று இறையனுபவத்தை பெற்றுக்கொண்டனர்.



### புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை

ஏப்ரல் 28, 2024 முதல் மே 4, முடிய ஆறு நாட்கள் விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர். ஆடல், பாடல், வகுப்பு, விளையாட்டு என விசுவாச பயிற்சி விழா மிகச் சிறப்பாக அமைந்தது. இறுதி நாள் அனைவரும் இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர். ஏப்ரல் 28ஆம் தேதி மாதர்ஜோதிஸ் இயக்க தொடக்க விழா பங்களவில் நடைபெற்றது. அனைத்து தாய்மார்களும் அன்றைய தினம் திருப்பலியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



### புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

ஏப்ரல் 28, 2024 முதல் மே 5, முடிய 8 நாட்கள் விசுவாச பயிற்சி விழா வகுப்பு நடைபெற்றது. பங்கு மக்கள் இணைந்து மாணவர்களுக்கு மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கி மகிழ்ந்தனர். அருட்சகோதரர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து ஆடல், பாடல் மற்றும் விளையாட்டு, வகுப்புக்கள் வாயிலாக விசுவாச பயிற்சி விழாவை வழிநடத்தினர். 19 ம் தேதி 'ஆயருடன் ஒரு நாள்' என்ற சிந்தனையின் அடிப்படையில் PASTORAL VISIT நடைபெற்றது. காலை திருப்பலியுடன் ஆரம்பமாகி எல்லா பங்கு மக்களையும் சந்தித்து பக்த இயக்கங்களைப் பார்வையிட்டு நிறை குறைகள் கேட்டறிந்து நோயாளிகள் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி அந்த ஒரு நாளை மிகவும் மகிழ்ச்சியாக வழிநடத்தினார் நம் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள். மே 22ஆம் தேதி அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்களுக்கு பிரிவு உபசார விழா பங்குமக்கள், பக்தஇயக்கங்கள் சார்பில் நடைபெற்றது. மே 24ஆம் தேதி அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் இடமாற்றலாகி புனித பவுல் ஆலயத்திற்கு சென்றார்கள், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் புதிய பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார்கள்.

### புனித அமல மரியா ஆலயம் – சீனிவிளை

மே 01, 2024 முதல் மே 5, முடிய ஐந்து நாட்கள் விசுவாச பயிற்சி விழா வகுப்புகள் நடைபெற்றது. இதில் 56 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எல்லா நாட்களிலும் திருப்பலியுடன் விசுவாச பயிற்சி விழா வகுப்பு ஆரம்பமாகும். பின்பு வகுப்புகள் நடைபெறும். அதைத்தொடர்ந்து ஆடல், பாடல், விளையாட்டுக்கள் நடைபெறும். மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து அருட்கன்னியர்கள் நடத்திய தியானத்திற்கு அண்ணிக்கரை சென்றனர். அங்கு மாணவர்கள் விவிலியத்தை பற்றி அதிகமாக தெரிந்து கொண்டனர். இறுதி நாளில் பவனி நடைபெற்றது. மே 7 ஆம் தேதி மாணவர்களும் ஆசிரியர்களும் இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர்.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

மே மாதம் முதல் வாரம் விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. மே 11, 2024 சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை



ஆராதனை நடைபெற்றது.

மே மாதம் 16 ம் தேதி மிஷன்லீக் மாணவர்கள் தடிக்காரன்கோணம் நோயாளிகள் இல்லத்தை சந்தித்து அவர்களுக்கு நிதி உதவி வழங்கினார்கள். விசுவாச பயிற்சி விழா வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன் விவிலியத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, அதன்பின் ஆடல், பாடல், விளையாட்டு, வகுப்பு என்ற அடிப்படையில் நடைபெற்றது. விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுற்றுலா சென்றனர்.



**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

# தென்காசி மறைத்தளம்

## விசுவாச பயிற்சிவிழா

தென்காசி மறைத்தளத்தை சார்ந்த புளியறை சிறு மலர் தேவாலயத்தில் ஏப்ரல் மாதம் 29 முதல் மே மாதம் 4 ஆம் தேதி வரை விசுவாச பயிற்சிவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. புளியறை, புதூர் மற்றும் பிற மதங்களைச் சார்ந்த மாணவ மாணவிகள் உட்பட 70 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர். அருட்சகோதரர் மெல்வின் அவர்கள் விசுவாச பயிற்சி விழாவினை நடத்தினார். பங்குத்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் நன்முறையில் தலைமைபேற்று நடத்தினார். அருட்தந்தை பிரின்ஸ் அவர்கள் உடனிருந்து உற்சாகப்படுத்தினார். அனைத்து நாட்களிலும் மதிய உணவு வழங்கப்பட்டது.



இறுதி நாளில் அனைவருக்கும் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது. வாஞ்சிநகர் ஆலயம், மேக்கரை ஆலயம் மற்றும் சுந்தர பாண்டியபுரம் மறைத்தளம் ஆகிய இடங்களில் உள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான VPV மே மாதம் 7 முதல் 10 வரையிலான தேதிகளில் வாஞ்சிநகர் ஆலயத்தில் நடத்தப்பட்டது. இறுதி நாளில் பேரணியும் நடத்தப்பட்டது. அருட்சகோதரர் காட்வின் அவர்கள் இப்பயிற்சி விழாவினை நடத்தினார். தென்காசி மறைத்தள மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் அவர்கள் VPV மாணவர்களை சந்தித்து உற்சாகப்படுத்தி இனிப்புகள் வழங்கினார். வாஞ்சிநகர் பங்குத்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் அனைத்தையும் தலைமைபேற்று நடத்தினார். இறுதி நாளில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

## ஆம்பூர் மறைத்தளம்

மே மாதம் 15 முதல் 19 வரையிலான தேதிகளில் விசுவாச பயிற்சிவிழா நடத்தப்பட்டது. 22 மாணவ மாணவிகள் விசுவாச பயிற்சி விழாவில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தனர். அருட்சகோதரர் காட்வின் அவர்கள் விசுவாச பயிற்சி விழாவினை நடத்தினார். மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மற்றும் மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் ஆகியோர் வருகை தந்து மாணவ மாணவியர்களை ஊக்குவித்து இனிப்பு வழங்கினர். இறுதி நாளில் பேரணியும் நடத்தப்பட்டது. அனைத்து நிகழ்வுகளிலும் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அருட்தந்தை தோமஸ் கோய்ப்புறம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

## மாதர்ஜோதிஸ் ஆண்டு விழா

மாதர்ஜோதிஸ் இயக்கத்தின் ஆண்டு விழாவும் பாதுகாவலர் தின விழாவும்



வாஞ்சிநகர் தூய மரியன்னை ஆலயத்தில் மே 26, 2024 அன்று நடைபெற்றது. விழாவிற்கு முன்னதாக மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி ஜிம்மி அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலியும் தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் மறை மாவட்ட இயக்குநர் அருள்பணி ஜிம்மி அவர்கள் தலைமை தாங்கினார். மறைமாவட்ட தலைவி திருமதி ஜூலியட் அவர்களும் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி ரோஸ் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மேலும் பொதுக்கூட்டத்தில் அருட்பணி டென்சி, அருட்பணி ஜான் ஜோசப் ஆகியோரும் அருட்சகோதரிகளும் புளியரை மேக்கரை சுந்தரபாண்டிபுரம் மற்றும் வாஞ்சி நகர் ஆகிய ஆலயங்களில் இருந்து மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பித்தார்கள். நிகழ்வை அருட்பணி மகேஷ் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

# தேனி திருத்தொண்டுத்தளம்

தேனி திருத்தொண்டுத்தளத்தில் பணியாற்றிய அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் அவர்களுக்கு தேனியில் மே 18, 2024 இல் பிரியாவிடை வழங்கப்பட்டது. மே 19, 2024 கம்பத்தில் முதல் திருவிருந்து கொண்டாட்டத்தை தொடர்ந்து பிரியாவிடை வழங்கப்பட்டது. தேனியில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவுபடுத்தப்பட்ட மறைபரப்புத்தளங்களின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டோபின் ஆலபுரக்கல் தக்கலை மறைமாவட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். அன்றையதினம் கம்பம் மறைபரப்புத்தளத்தில் அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் அவர்கள் தலைமையில் திருப்பலி மற்றும் முதன்முறையாக முதல் திருவிருந்து வழங்குதல் நிகழ்வும் நடைபெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது. அருட்சகோதரி. எல்சி SH அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும் அருட்தந்தை ஷான் அயல்லூர், கிராம பிரதிநிதியுடன் சேர்ந்து அருட்தந்தை அவர்களுக்கு நன்றி கூறினார். ஜூன் 2019 இல் தேனி மாவட்ட மறைபரப்புப் பணி காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தேனி மாவட்டத்தின் முதல் மறைபரப்பு பணி ஒருங்கிணைப்பாளராக அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் நியமிக்கப்பட்டார். குமுளி பங்கில் தங்கி, மறைபரப்புத்தளங்களை மேற்பார்வையிட்டார். பின்னர், அவரது முயற்சி மற்றும் ஒருங்கிணைப்பின் மூலம், பிப்ரவரி 26, 2023 அன்று தேனியின் ஜெங்கல்பட்டியில் ஒரு புதிய மறைபரப்புத்தள கட்டிடம் கட்டப்பட்டு மந்திரிக்கப்பட்டது. அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் தேனியில் ஐந்து ஆண்டுகளும், கம்பத்தில் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றினார். கம்பம்-தேனி மறைபரப்புத்தளத்தின் முதல் பணி ஒருங்கிணைப்பாளராக அவரது தலைமையின் கீழ், மறைபரப்பு பணி புதிய உற்சாகத்தைப் பெற்றதோடு விசுவாச எழுச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.

## மறைமாவட்ட பொதுத்தேர்வு முடிவுகள்

தமிழ்நாடு கல்வி வாரியத்தால் நடத்தப்பட்ட பன்னிரெண்டாம் மற்றும் பத்தாம் வகுப்பு தேர்வுகளின் முடிவுகள் முறையே மே 6 மற்றும் 10, 2024 இல் அறிவிக்கப்பட்டது. இந்த தேர்வுகளில் தக்கலை மறைமாவட்ட பள்ளிகள் அனைத்தும் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளன. மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதில் மறைமாவட்டத்தின் அர்ப்பணிப்புக்கு இதுச் சான்றாகும்.

# MONTHLY AGENDA – JUNE 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 10.00 am<br>02.00 pm | **CAT :** HM Meet @ Kalluvilai<br>**KKSSS :** SAFP training Program @ Mukkoottukal |
| 2 | Sun | 10.00 am<br>10.00 am<br>02.00 pm<br>02.30 pm<br>02.00 pm | **CAT : Catechism Inaugural Ceremony 2024-2025 at parish level**<br>**LAITY : Diocesean level meeting @ Sangamam**<br>**SMYM : Padanthalummoodu forane gathering @ Annikarai**<br>**VP : CC Meeting @ Padanthalummoodu**<br>**CML : Election of new office bearers** |
| 4 | Tue | 10.00 am | **SINAI :** Intercessory prayer @ Kalluvilai |
| 5 | Wed | 10.00 am | **KKSSS : World Environmental Day Celebration** |
| 6 | Thu | 02.00 pm | **KII :** Annual Day @ Kalluvilai |
| 7 | Fri | 10.00 am<br>10.00 am | **SINAI :** One day Retreat @ Vattakottai<br>**FA :** Marriage prepration Course @ Kalluvilai |
| 8 | Sat | 10.00 am | **FA : Marriage prepration Course @ Kalluvilai** |
| 9 | Sun | 02.30 pm<br>10.00 am | **VP :** AC Monthly Meeting<br>**FA :** Marriage prepration Course @ Kalluvilai |

| | | | |
|---|---|---|---|
| 10 | Mon | 03.00 pm | **EC : UCC Monthly Meeting** |
| 14 | Fri | 10.00 am | **SMYM : Youth Camp @ Sangamam** |
| 15 | Sat | | **SMYM : Youth Camp @ Sangamam** |
| 16 | Sun | 2.00 pm | **SMYM :** Youth Camp @ Sangamam<br>**CAT :** Re-examination of Std X,XII |
| 17 | Mon | 10.00 am<br>10.00 am<br>05.00 pm | **CAT : Basic Training programfor teachers @Soosaipuram**<br>**KKSSS : Educare Class @ Kalluvilai**<br>**EC : UCC Karungal District Meeting** |
| 18 | Tue | 9.30 am<br>10.00 am | **Priest's Conference @ Sangamam**<br>**SINAI :Intercessory prayer @ Kalluvilai** |
| 20 | Thu | 10.00 am | **KKSSS :** Workshop on Kitchen Gardening @ Kalluvilai |
| 22 | Sat | 10.00 am | **SINAI :**One Day retreat @ Kalluvilai |
| 23 | Sun | 10.00 am | **Kaikkars Meet @ Sangamam** |
| 25 | Tue | 10.00 am | **SINAI :Intercessory prayer @ Kalluvilai** |
| 30 | Sun | 02.00 pm | **CAT :** Annual Day celebration of Academic year 2023-2024 |

**FR. THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS**



First Holy Communion
May 4, 2024, St. Joseph's Forane Church, Soosaipuram



Diocesan Schools, Teachers' Meet, May 30, 2024



Pastoral Visit, KKSSS, May 10, 2024



VII Pastoral Council Inauguration, May 1, 2024, Sangamam



Catechism, Mission League and Kuzhandai Iso Iyakkam Inauguration, May 18, 2024

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570